# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 135/2018 நாள்.17.9.25

PW1- திரு. கண்ணன், த /பெ. திரு. துரைமாணிக்கம்

4, 5ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் பொறியியல் பட்டயம் படித்துள்ளேன். நான் வெளிநாட்டில் வேலை பார்க்கிறேனா என்றால் இல்லை நெய்வேலி நிலக்கரி தொழிற்சாலையில் வேலை பார்க்கிறேன். மணிமொழி எங்கு வேலை பார்த்தார் என்றால் பொறியாளர் வேலை பார்த்தார் வெளிநாடும் போனார். முதல் வாதி இளந்திரையன் என்ன வேலை பார்த்தார் என்றால் வேலை செய்யவில்லை பெட்டிகடை வைத்திருந்தார். மணிமொழியுடன் எனக்கு வருத்தம் இல்லை என்றால் ஆமாம். எனக்கு பூர்விக ஊர் புனல் வாசல் என்றால் ஆமாம். இளந்திரையன் private companyயில் வேலை செய்தபோது காதுகேட்காமல் போய்விட்டதா என்றால் இல்லை ஆனால் காது கேட்காது. திருமணத்திற்கு பிறகு அவர் வேலைக்கு போகவில்லை என்றால் ஆமாம். திருவையாறு சீனிவாச வைத்தியர் என் அப்பாவின் நண்பர் என்றால் ஆமாம். என் அப்பா ஆசிரியர் வேலை தவிர பணம் யாராவது கேட்டால் வட்டிக்கு கொடுப்பார் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பத்திரம் படித்து பார்த்திருக்கேனா என்றால் படித்துள்ளேன். என் அப்பா வா.சா.ஆ.1 பத்திரம் மூலம் சொத்தை யாரிடமிருந்து வாங்கியுள்ளார் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு வேணுகோபால் நாயுடு, சீனிவாசனிடமிருந்து வாங்கியதாக உள்ளது. இதன் விஸ்தீர்ணம் 7000 சதுரடி என்றால் ஆமாம். அது முழுவதும் ஏ அட்டவணை சொத்து என்றால் ஆமாம். வழக்குதாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு சகோதரர்களாகிய நாங்கள் சேர்ந்துதான் விபரம் சொன்னோம் என்றால் ஆமாம். என் சகோதரர் மணிமொழி புனல்வாசலில் வசிக்கிறார் என்றால் ஆமாம். மணிமொழி என் அப்பாவுடன் சண்டைக்கு போவார் என்றால் இருக்கலாம். பி அட்டவணை சொத்து என்ன என்றால் புனல்வாசல் கிராமத்தில் வயலும், வீடும் உள்ள பகுதியாகும். புனல்வாசல் கிராமத்தில் உள்ள வீட்டில்தான் மணிமொழி வசிக்கிறார் என்றால் ஆமாம். புனல்வாசல் கிராம வயலும் அவரிடம் உள்ளதா என்றால் ஆமாம். இரண்டும் ஒரே புல எண்ணா என்றால் இல்லை வேறுவேறு இடத்தில் உள்ளது. தற்போது என்னிடம்

காண்பிக்கபடும் சிட்டாதான் புனல்வாசல் வயல் சொத்திற்குரியது என்றால் ஆமாம் அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். அது எனது அப்பா பெயரிலும் மணிமொழி பெயரிலும் உள்ளது. அதன் விஸ்தீர்ணம் 2 .21 ஏக்கர் என்று உள்ளது என்றால் ஆமாம். வழக்கில் 46சென்ட் போட்டுள்ளோம் என்றால் ஆமாம் அதில் வீடு உள்ளது, நிலத்தின் புல எண் குறிப்பிடவில்லை. நிலம் இருப்பது கடுவெளி கிராமம். கடுவெளி சொத்து இதில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். கதவு எண் 3/48இல் வீடு உள்ள இடம் 46 சென்ட்டா என்றால் ஆமாம். 1ஆம் வாதிக்கு முதலில் திருமணம் ஆனது என்றால் ஆமாம். இறந்துபோன சகோதரர் ரவிவர்மன் கால்நடை மருத்துவர் என்றால் ஆமாம். எங்கள் எல்லோருக்கும் முன்பாகவே அவர் அரசு பணியில் சேர்ந்துவிட்டார் என்றால் ஆமாம். எங்கள் குடும்பத்தில் நானும் மணிமொழியும் மருத்துவர் ரவிவர்மனும்தான் வேலைக்கு போனோம் என்றால் ஆமாம். கிள்ளிவளவன் படிக்கவில்லை என்றால் ஆமாம். புனல்வாசல் நிலத்தை ஆரம்பத்தில் கிள்ளிவளவன் விவசாயம் பார்த்தாரா என்றால் ஆமாம். ரவிவர்மன் அரசு வேலைக்கு போய்விட்டதால் பாகபிரிவினைக்கு முந்திய சொந்தமாக வீடு கட்டிவிட்டதால் பாகத்தில் வீடு வேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்றால் ஆமாம். புதுவீடு கிரக பிரவேசம் செய்து பத்து நாளில் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். என் அண்ணன் மணிமொழி கிள்ளிவளவன் பெயரில் அ.வஎண்.82/1994 திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அவருக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணம் அந்த தீர்ப்பு நகல் என்றால் ஆமாம். அது **பி.வா.சா.ஆ.2** ஆகும். என்னிடம் காண்பிக்கபடும் பிராது நகல் அந்த வழக்கிற்குரியது என்றால் ஆமாம் அது **பி.வா.சா.ஆ.3** ஆகும். அந்த வழக்கில் கிள்ளிவளவன் கொடுத்த எதிர்வழக்குரைதான் என்னிடம் காண்பிக்கபடுவது என்றால் ஆமாம். அது **பி.வா.சா.ஆ.4** ஆகும். மற்றொரு சகோதரர் இளந்திரையன் சகோதரர் கிள்ளிவளவனுக்கு எதிராக கும்பகோணம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அவ எண். 308/1995 இல் ஏற்பட்ட தீர்ப்பாணை நகல்தான் என்னிடம் காண்பிக்கபடுவது என்றால் ஆமாம். அது **பி.வா.சா.ஆ.5** ஆகும். அந்த வழக்கில் தாக்கல் செய்யபட்ட கிள்ளிவளவனின் எதிருரைதான் என்னிடம் காண்பிக்கபடுவது என்றால் ஆமாம். அது **பி.வா.சா.ஆ.6** ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கபடுவது அ.வ எண் 82/1994 இல் ஏற்பட்ட தீர்ப்பாணை என்றால் ஆமாம். அது

**பி.வா.சா.ஆ.7** ஆகும். பி.வா.சா.ஆ.2 வழக்கில் கிள்ளிவளவன் என் அப்பா எழுதி வைத்த விருப்புறுதி ஆவணத்தை எதிருரையில் சொல்லி அது தீர்ப்புரையில் குறிப்பிடபட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.6 லும் அதேபோல் மேற்படி விபரத்தை சொல்லியுள்ளார் என்றால் ஆமாம்.நான் எந்த வருடம் நெய்வேலியில் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 1988. எனக்கும் கிள்ளிவளவனுக்கும் 1988இல்வேலைக்கு சேர்ந்தது முதல் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. நான் பணியில் சேர்வதற்கு முன்பாக நான் மணிமொழியும் அரிவாளால் கிள்ளிவளவனை வெட்ட போனதால் மணிமொழி மீது புகார் கொடுக்கபட்டு வழக்காகி விசாரணை நடந்தது என்றால் ஆமாம். கிள்ளிவளவனுக்கு பெண் எடுத்தது விளாங்குடி என்றால் ஆமாம் அது புனல்வாசலுக்கு அருகில் உள்ளது என்றால் ஆமாம். என் அப்பாவால் எழுதி வைக்கபட்ட உயில் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கபட்டுள்ளது என்றால் வழக்கு போட்டபிறகுதான் தெரியும்.வழக்கு போட்டபிறகு அதை நகல் வாங்கி பார்த்தேனா என்றால் வாங்கி பார்த்தேன் வழக்கில் நகல் தாக்கல் செய்யவில்லை. ரவிவர்மன் இறந்துபத்துநாளில் என் அப்பாவுடன் சொத்து பங்கு பிரித்து அடிதடி என்றால் அடிதடி இல்லை பஞ்சாயத்து நடந்தது. உயில் படி கிள்ளிவளவனுக்கு கொடுக்கபட்ட சொத்துகளுக்கு வருவாய் ஆவணங்கள் அவர் பெயரில் மாற்றபட்டது என்றால் சரியல்ல. கும்பகோணம் சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்தபோது கிள்ளிவளவன் பெயரில் இருந்தது. கிள்ளிவளவன் எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தி்ன் அடிப்படையில் கிள்ளிவளவனின் மனைவி குழந்தைகள் பெயரில் மாறிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. கும்பகோணம் சொத்து வாங்கும் சமயத்தில் வீடா என்றால் ஆமாம். அதன்பிறகு அந்த வீட்டை இடித்து விற்றார்கள் என்றால் ஆமாம். கும்பகோணம் வீடு தற்போது கிரையம் வாங்கி 6, 7 பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றால் ஆமாம். உயில் எழுதிய விபரம்எனக்கு வழக்கு தாக்கல் செய்தற்கு 12 ஆண்டுகளுக்கு முன்பே தெரியும் என்றால் சரியல்ல. என் அப்பா எழுதி வைத்த உயில் படி அவர் இறந்தபிறகு நடைமுறைக்கு வந்து கிள்ளிவளவன் அடைந்து அனுபவித்து அதை அவர் மனைவி மக்கள் செட்டில்மெண்ட் மூலம் அடைந்து அதை அவர்கள் 6, 7 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்துவிட்டார்கள் என்று சொன்னால் ஆமாம். அதை 6, 7 பிரதிவாதிகள் 8ஆம் பிரதிவாதியிடம் அடமானம் வைத்து கடன் வாங்கி புதிய கட்டிடம் கட்டியுள்ளார்கள்

என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடுவது என்அப்பா கிள்ளிவளவனுக்கு எழுதி கொடுத்த உயில் என்றால் ஆமாம் அது **பி.வா.சா.ஆ.8** ஆகும்.

<u>6, 7 பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

6, 7 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்தை ரத்து செய்யக்கோரி கும்பகோணம் மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்தோம் என்றால் ஆமாம். அந்த மனு முழுவிசாரணைக்கு பிறகு ஆவணம் முறையாக பதிவு செய்யபட்டுள்ளதாக சொல்லி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஆமாம். அதற்கு மேல்முறையீடு செய்யவில்லை என்றால் இந்த வழக்கு இருந்ததால் செய்யவில்லை. இந்த வழக்கில் நான் மணிமொழிக்காவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். மணிமொழி நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளித்தால் மேலும் உண்மைகள் தெரிந்துவிடும் என்பதால் அவருக்காகவும் நானே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>8ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

6, 7 பிரதிவாதிகள் 8ஆம் பிரதிவாதியிடம் சி அட்டவணை 1வது அயிட்ட சொத்தை 3.11.2021இல் அடமானம் செய்து கடன் பெற்றதால் தரப்பாக சேர்த்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த கடன் தொகை 66,89,000 என்றால் கடன் தொகை எனக்கு தெரியாது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.